முதல்வர் விஜய் இன்று கரூர் வருகை: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

கரூர், ஜூலை 9: கரூரில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி மற்றும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் ச. ஜோசப் விஜய் வெள்ளிக்கிழமை வருகிறார். இதையொட்டி தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் திருச்சிக்கு வெள்ளிக்கிழமை காலை வரும் அவர், அங்கிருந்து காரில் கரூருக்கு வருகிறார். காலை 11 மணியளவில் கரூர் வெண்ணைமலையில் உள்ள அட்லஸ் கலையரங்கில் நடைபெறும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று முதல்வர் பேசுகிறார். இதில் 5,000 பேர் பங்கேற்கின்றனர். இந்நிகழ்ச்சியில், 'க்யூஆர் கோடு' அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சிக்காக அட்லஸ் கலையரங்க மைதானத்தைச் சுற்றி சுமார் 10 அடி உயரத்துக்கு தகரக் கொட்டகைகள், தற்காலிக தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், அங்கிருந்து பிற்பகல் ஒரு மணியளவில் கரூர் - சேலம் புறவழிச் சாலையில் இருந்து கோவை சாலை, பழைய பேருந்து நிலைய ரவுண்டானா, உழவர் சந்தை, திருமாநிலையூர் வழியாக சுங்ககேட், தான்தோன்றிமலை ஆகிய பகுதிகள் வழியாக சாலை வலம் வரும் முதல்வர், மாவட்ட ஆட்சியரக வளாகம் அருகேயுள்ள பொதுப் பணித் துறையின் பயணியர் மாளிகைக்குச் சென்று ஓய்வெடுக்கிறார்.

முதல்வரின் சாலைப் பேரணி நிகழ்வுக்காக கரூர் பேருந்து நிலைய ரவுண்டானா முதல் வெங்கக்கல்பட்டி வரை சாலையின் இருபுறமும் தடுப்புவேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக் கூட்டம்: பிற்பகல் 3 மணியளவில் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்கும் முதல்வர் விஜய், அங்கு கிருஷ்ணராயபுரத்தை அடுத்த மணவாசி ஊராட்சியில் 13,500 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய வகையில், ரூ. 1,700 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி செய்யும் தனியார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து, கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ஆம் தேதி வேலுச்சாமிபுரத்தில் தவெக பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் 32 பேருக்கு அரசு வேலைக்கான பணிநியமன ஆணையை வழங்கிப் பேசுகிறார். பின்னர், கார் மூலம் திருச்சிக்கு சென்று, அங்கிருந்து சென்னை செல்கிறார்.

டிஐஜி ஆய்வு: முதல்வர் வருகையையொட்டி கரூர் அட்லஸ் கலையரங்கில் பாதுகாப்பு ஏற்பாடுகளை உளவுத் துறை டிஐஜி தர்மராஜன் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். மேலும், கூட்ட நெரிசல் ஏற்பட்டால் அதைக் கட்டுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையைச் சேர்ந்த 78 பேர் கரூரில் முகாமிட்டுள்ளனர். மேலும், பாதுகாப்புப் பணிக்காக தமிழகம் முழுவதும் இருந்து சுமார் 6,000 போலீஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அரசுப் பேருந்துகளில் 'மகளிர் விடியல் பயணம்' பெயர் மாற்றம்

சென்னை, ஜூலை 9: தமிழக அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணம் செய்யும் திட்டத்தைக் குறிக்கும் 'மகளிர் விடியல் பயணம்' என்ற பெயர் மாற்றப்பட்டு, 'மகளிர் பயணம்' என்ற பெயரில் பயன்படுத்தப்படஉள்ளது.

தமிழகத்தில் கடந்த திமுக ஆட்சியில், பெண்களின் பொருளாதாரச் சுமையை குறைக்கும் நோக்கில் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு 'மகளிர் விடியல் பயணம்' எனப் பெயரிடப்பட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் இயக்கப்பட்ட பேருந்துகளில் அதற்கான பெயர்ப் பலகைகளும் ஒட்டப்பட்டிருந்தன. நாள்தோறும் லட்சக்கணக்கான பெண்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில், முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக அரசு, இந்தத் திட்டத்தின் பெயரில் இருந்த 'விடியல்' என்ற வார்த்தையை நீக்கி, 'மகளிர் பயணம்' என்ற பெயரை மட்டுமே பயன்படுத்த முடிவு செய்துள்ளது. இதற்கான மாற்றம் அரசுப் போக்குவரத்துக்கழகங்களின் பேருந்துகளில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள இந்தப் பேருந்துகளில் புதிய பெயருடன் கூடிய ஸ்டிக்கர்கள் பெயர் பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளன. மேலும், டிஜிட்டல் பெயர்ப் பலகைகளிலும் பெயர் மாற்றப்பட்டுள்ளன. ஆனால், திட்டத்தின் செயல்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றும், பெண்கள் வழக்கம்போல் நகர அரசுப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் செய்யலாம் என்றும் போக்குவரத்துத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. பெயர் மாற்றம் மட்டுமே செய்யப்பட்டுள்ளதால், திட்டத்தின் பயனாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் கூறப்படுகிறது.

இதற்கு முன்பாக, முந்தைய திமுக அரசு அறிமுகப்படுத்திய 'நான் முதல்வன்' உள்ளிட்ட சில திட்டங்களின் பெயர்களும் தற்போதைய அரசால் மாற்றப்பட்டுள்ளன. அந்த வரிசையில், தற்போது 'மகளிர் விடியல் பயணம்' திட்டத்தின் பெயரும் 'மகளிர் பயணம்' என மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பள்ளிக் கல்வியில் தேசிய அளவில் தமிழகம் தொடர்ந்து முன்னிலை

மத்திய அரசின் ஆய்வறிக்கையில் தகவல்

சென்னை, ஜூலை 9: பள்ளி மாணவர் சேர்க்கை, இடைநிற்றல் குறைவு, உள்கட்டமைப்பு போன்ற பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கிய குறியீடுகளில் தேசிய அளவில் தமிழகம் சிறந்து விளங்குவதாக மத்திய அரசின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பள்ளிக் கல்வித் துறைச் செயலர் பி.சந்தரமோகன் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: மத்திய கல்வி அமைச்சகம் ஒருங்கிணைந்த மாவட்ட கல்வி தகவல் மேலாண்மை என்ற பெயரில் கல்வி மேலாண்மை (யுடிஐஎஸ்இ) அறிக்கையை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த வகையில், 2025-26-ஆம் கல்வி ஆண்டுக்கான கல்வி மேலாண்மையை அறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கியக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை, இடை நிற்றல் குறைவு, ஆசிரியர் எண்ணிக்கை, கல்வி உள்கட்டமைப்பின் பயனுள்ள பயன்பாடு மற்றும் பத்தாம் வகுப்புக்கு பிந்தைய கல்வித் தொடர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேசிய அளவில் தமிழகம் சிறப்பான முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

யுடிஐஎஸ்இ அறிக்கையின்படி தமிழகத்தில் 57,566 பள்ளிகள், 1 கோடியே 24 லட்சத்து 2,872 மாணவர்கள், 5 லட்சத்து 69,909 ஆசிரியர்கள் உள்ளனர். மாநிலத்தின் மாணவர்-ஆசிரியர் விகிதம் விகிதம் 22:1 ஆக இருந்து, தேசிய சராசரியான 24:1-ஐ விட சிறப்பாக உள்ளது. மேலும், ஒரு பள்ளிக்கு சராசரியாக 215 மாணவர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் இருப்பது கல்வி உள்கட்டமைப்பு திறமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதை எடுத்துக் காட்டுகிறது.

தொடக்க நிலை, நடுநிலைப் பள்ளிகள் இடைநிற்றல் பூஜ்ஜியம் சதவீதமாக பதிவாகியுள்ளது. இடைநிலைக் கல்வியில் இது 6.2 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேசிய சராசரியான 9.5 சதவீதத்தைவிடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும். மொத்த சேர்க்கை விகிதத்திலும் தமிழகம் தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. தொடக்கநிலையில் 92.2 சதவீதம், நடுநிலைப்பள்ளிகள் 95.2 சதவீதம் இடைநிலையில் 97.4 சதவீதம், மேல்நிலைப் பள்ளிகளில் 85.1 சதவீதம் எனப் பதிவாகியுள்ளது.

கல்வி உள்கட்டமைப்பின் பயன்பாட்டிலும் தமிழகம் சிறப்பாகத் திகழ்கிறது. தேசிய அளவில் ஒரு பள்ளிக்கு சராசரியாக 169 மாணவர்கள் உள்ள நிலையில், தமிழகத்தில் ஒரு பள்ளிக்கு 215 மாணவர்கள் உள்ளனர். பள்ளி இடை நிற்றல் குறைத்தல், மாணவர் சேர்க்கையை உயர்த்தல், போதுமான ஆசிரியர் எண்ணிக்கை உறுதி செய்தல், கல்வி உள்கட்டமைப்பை திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் பத்தாம் வகுப்புக்குப் பிந்தைய பல்வேறு கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் தமிழகம் சிறந்து விளங்குகிறது.

இவ்வாறு, மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு தரமான கல்வி, எண்ம கல்வி உள்கட்டமைப்பு, அனைவரையும் உள்ளடக்கிய கல்வி, தொழில்நுட்பத் திறன் மேம்பாடு மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற கற்றல் சூழலை உருவாக்கும் பணிகளில் தமிழக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு மத்திய அரசின் அறிக்கை வலுவான அங்கீகாரமாக அமைந்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திண்டிவனத்தில் அதிமுக நிர்வாகிகள் கூட்டத்தில் இரு அணிகளிடையே மோதல்

விழுப்புரம், ஜூலை 9: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற அதிமுக நிர்வாகிகள் கூட்டத்தில் இரு அணிகளின் நிர்வாகிகளிடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து போலீஸார் அங்கு சென்று மோதலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அனுப்பி வைத்தனர்.

விழுப்புரம் அதிமுக மாவட்டச் செயலராக இருந்த முன்னாள் அமைச்சரும், மயிலம் எம்எல்ஏவுமான சி.வி.சண்முகம் அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அதற்கு மாற்றாக விழுப்புரத்தைச் சேர்ந்த இரா.பசுபதி கட்சியின் மாவட்டச் செயலராக நியமிக்கப்பட்டார். இதற்கான அறிவிப்பை அக்கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து இரா.பசுபதி தலைமையில் விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக திண்டிவனத்தில் நகர நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் இரா.பசுபதி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் சிலர், முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மற்றும் கட்சியின் நிர்வாகிகளுக்கு முறையாக அழைப்பு விடுக்கப்படவில்லை எனக் கூறி, கூட்டத்திலிருந்து வெளியேறினார். இதைத் தொடர்ந்து அங்கிருந்த இரு தரப்பு அதிமுக நிர்வாகிகளிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து திண்டிவனம் போலீஸார் நிகழ்விடம் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைத்தனர்.

தமிழக காவல் துறையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஜூலை 9: தமிழக காவல் துறையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் கே.மணிவாசன், வியாழக்கிழமை வெளியிட்ட உத்தரவு (பழைய பதவி அடைப்புக்குள்):

வி.வருண்குமார்-ஈரோடு சிறப்பு அதிரடிப் படை டிஐஜி (சென்னை சிபிசிஐடி டிஐஜி), வி.விக்ரமன்-சிபிசிஐடி டிஐஜி (காத்திருப்போர் பட்டியல்), பி.ரகுபதி-தாம்பரம் மாநகர காவல் துறை பள்ளிக்கரணை துணை ஆணையர் (காத்திருப்போர் பட்டியல்) என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

CHANGE OF NAME

I, **R. SASIKALA** (Hindu), Daughter of Thiru Ramaiya, Born on 17th October 1993, (Dist. of Birth: Thiruvannamalai) Residing at No: 8, AP Arasu Street, Nehru Nagar, Erukancherry, Chennai-600118 has Converted to Islam with the Name of **SHAIMA SIDDIQUE**

R. Sasikala
Chennai 19th June 2026

பெயர் மாற்றம்

நான், **Mrs. BANDANA KAUR CHADHA**, Wife of **Mr. SANDEEP CHADHA**, வயது : 48, எண் A-1001, Casagrand Crescendo, மேல் அயனம்பாக்கம், முகப்பேர், மதுரவாயல், திருவள்ளூர், தமிழ்நாடு - 600095 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது திருமணத்திற்கு முந்தைய பெயர் "MS. BANDANA KAUR JAGGI" என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன். 25.11.2007 அன்று Mr. SANDEEP CHADHA அவர்களுடனான எனது திருமணத்திற்குப் பிறகு, நான் எனது கணவரின் குடும்பப்பெயரை ஏற்றுக்கொண்டு, எனது பெயரை "Ms. BANDANA KAUR JAGGI" என் பதிலிருந்து "Mrs. BANDANA KAUR CHADHA". என்று மாற்றிக் கொண்டேன்.

இனிவரும் காலங்களில், அனைத்து நோக்கங்களுக்காகவும் நான் "Mrs. BANDANA KAUR CHADHA" என்ற பெயரிலேயே அறியப்படுவேன் மற்றும் அழைக்கப்படுவேன்.

"Ms. BANDANA KAUR JAGGI" மற்றும் "Mrs. BANDANA KAUR CHADHA" ஆகிய இரண்டு பெயர்களும் ஒரே நபரையே குறிக்கின்றன.

இடம் : சென்னை
தேதி : 10/07/2026

BANDANA KAUR CHADHA

பெருநகர சென்னை மாநகராட்சி
வட்டார அலுவலகம் (தெற்கு)

வ.அ.(தெ).ந.க.எண்.A11/1303/2026

இரண்டு உறை மின்னணு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மேற்பார்வை பொறியாளர், வட்டார அலுவலகம் (தெற்கு) அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பணியின் விவரம் : மண்டலம்-14ல் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் மண்டலம் 9 முதல் 15 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை சமன் செய்ய 8 Hydraulic Excavator (Poclains) மற்றும் 6 Bull Dozer இயந்திரம் மூலம் சமன் செய்ய 6 மாத காலத்திற்கு வாடகைக்கு பணியமர்த்தும் பணி (2 சிப்பங்கள்)

பணியின் உத்தேச தொகை : ரூ.228.37 லட்சம் மற்றும் ரூ. 185.55 லட்சம்

முன் வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 23.07.2026 அன்று மாலை 3.00 மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 24.07.2026 அன்று மாலை 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்

செ.ம.தொ.இ/2260/ ஒப்பந்தப்புள்ளி /2026 மேற்பார்வை பொறியாளர், வட்டார அலுவலகம் (தெற்கு)

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் மீட்பு மற்றும் மேலாண்மை துறை

தங்க நகைகள் ஏல அறிவிப்பு

CUB

நிர்வாக அலுவலகம் : எண். 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001.
மின்னஞ்சல்: crmd@cityunionbank.in, போன்: 0435-2432322, கட்டணம்: 0435-2431746

எங்கள் வங்கியின் கிளை அலுவலகத்தில், தங்க நகைகளின் பேரில் கடன் பெற்றுள்ள கீழ்கண்ட நபர்களுக்கு, நகைக்கடன் கெடு முடிந்து நெடுநாட்கள் ஆகியும் கடன் பாக்கி முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற நோட்டீஸ் அனுப்பியும், கடன் கணக்கை முடித்து நகைகளை மீட்காதபடியால் உடனடியாக அசல் வட்டி மற்றும் இதர செலவுகள் உபட கடன் முழுவதும் செலுத்தி நகைகளை திரும்பப்பெற வேண்டுமென கோரப்படுகிறது. அப்படி தவறினால், கடனுக்கு ஈடாக வைக்கப்படுள்ள நகைகள், கடன் பெற்ற வர்களின் செலவிலேயே வருகிற **20.07.2026 தேதி திங்கள் கிழமை பிற்பகல்-01.00 மணிக்கு** வங்கி கிளை அலுவலகத்தில் கிளை மேலாளர் அவர்களால் பகிரங்க ஏலம் விடப்படும் எனவும் அல்லது மறு ஏல அறிவிப்பினறி வங்கி நிர்வாகத்தின் சௌகர்யப்படி வேறு ஏதாவது தேதியில் ஏலம் விடப்படும் எனவும் இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கீழ்கண்ட கடன் பெற்றவர்களில் யாராவது இறந்திருந்தால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் பாத்தியப்பட்டவர்களுக்கும் வங்கி தொடர்பு கிடைக்கப்பெறாதவர்களுக்கும் பொருந்தும். ஏலத்தில் பெற்ற தொகையில் மேற்படி நகை கடனுக்கு உரிய தொகை போக மீதி இருந்தால் அக்கடனதாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிற கடன்களுக்கோ ஜாமீனதாரராக உள்ள கடன்களுக்கோ வரவு வைக்கப்படும் ஏலத்தில் பெற்ற தொகை கடன் தொகையை விட குறைவாக இருந்தால் மீதித்தொகை சட்ட நடவடிக்கை மூலம் வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது கடன் பெற்ற நபர்கள் தங்கள் கடன் கணக்கில் ஏதேனும் பகுதி பணம் செலுத்தியிருந்தாலும் ஏல தேதிக்குள் கடன் வட்டி இதர செலவுகள் முழுவதும் கட்டி நகைகளை மீட்காவிடில் அந்த நகைகளும் ஏலம் விடப்படும் என அறிவிக்கின்றோம்

இந்த நடவடிக்கைகளை மாற்றவோ ஒத்திப்போடவோ நிறுத்திவைக்கவோ குறிப்பிட்ட நகைகளை ஏலத்திலிருந்து நீக்கி வைக்கவோ வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு என்பதனை அறியவும்.

ஏலம் நடைபெறும் தேதியில் நிலவும் சந்தை மதிப்பின் படி ஒரு கிராமுக்கான விலை நிர்ணயிக்கப்படும்.

வரிசை எண்	நகை கடன் எண் & கடன் பெற்ற தேதி	கடன் பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி	நகைகளின் எடை கிராம் (GW)	நகை விவரம்	KDM/ NON KDM	கிளை பெயர் மற்றும் முகவரி
1	5021121300 44544 & 21.02.2026	திருமதி ஃபரிதா S 1/902, மகுதி நெரு, நெசவாளர் நகர், மேடவாக்கம், காஞ்சிபுரம்- 600100	103.40	CHAIN - 2	KDM 916	சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் 2A, எல்காட் அவென்யூ சாலை, சோழிங்கநல்லூர், சென்னை - 600119
2	5021120370 04171 & 06.11.2021	திருமதி பவித்ரா துரைமுருகன் பொரோமியன் டிரேடிங் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண் 96, குமாரசாமி நகர், சோழிங்கநல்லூர், சென்னை - 600119	8.20	CHAIN-1, MATTAL- 2	KDM: 916 (Chain) & 20 Carat (Mattal 2)	

பின் குறிப்பு 1. ஏலதாரர்கள் தங்கள் PAN விவரங்கள் கட்டாயம் எடுத்து வரவேண்டும். உரிய KYC ஆவணங்கள் அசல் மற்றும் அதன் நகல் உள்ளவர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள் 2. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவரின் முழு தொகையும் செலுத்த வேண்டும். இல்லையெனில் ஏலமான தொகை திரும்பிதரப்படமாட்டாது.

இடம்: கும்பகோணம், நாள்: 10.07.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் ஒப்பம்

பதிவு அலுவலகம்: 149,T.S.R.(பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு612001. CIN-L65110TN1904PLC001287, போன்: 0435-2402322, பேக்ஸ்: 0435-2431746. இணையதளம்www.cityunionbank.com

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda

மண்டல அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB), சென்னை கிராமப்புற பிராந்தியம், எண்.123, துகார் டவர்ஸ், R.L.சாலை, எழும்பூர், சென்னை - 600 008. போன்:044- 2888 5428 E-mail:sarcmt@bankofbaroda.com

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

"APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 விதி 6(2) & 8 (6) சேர்த்து வாசிக்கவும். இதன் படி அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மின்ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு.

இதன் மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கும் கடன் கொடுத்த வங்கியானது கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை பேங்க் ஆப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதினத்தில் எடுத்துக் கொண்டுள்ளதை அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ளது உள்ளபடியே" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவை தொகை/ குறைந்த பட்ச விலை / மின் ஏலதேதி மற்றும் நேரம், முன்வைப்பு தொகை மற்றும் ஏல உயர்வு தொகை போன்றவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண். 1 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :

கடன்தாரர்: திருமதி. இலக்கியா.P, க/பெ. திரு. B. கணேஷ், எண்.52, F1, முதல் தளம், ஜெயம் ரெசிடென்சி, SS நகர், SS பூங்கா அருகில், திருமுல்லைவாயல், திருவள்ளூர் மாவட்டம், சென்னை - 600 062.

மேலும்: ப்ளாட் எண்.202, 2வது தளம், கதவு எண்.14 & 14/22, துலிப் அப்பார்ட்மெண்ட்ஸ், பிரமின் தெரு, வார்டு-E, எண்.63&68, கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, சென்னை - 600 080.

மொத்த நிலுவை தொகை: 05-07-2026 அன்று வரை ரூ.95,13,257.58 (ரூபாய் தொண்ணூற்று ஐந்து லட்சத்து பதிமூன்றாயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு மற்றும் பைசா ஐம்பத்து எட்டு மட்டும்) மேலும் **05-07-2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் : சொத்தின் அட்டவணை: திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, பிராமின் தெரு, கொரட்டூர் கிராமத்தில் சம பங்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள 488 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் "துலிப்" என அறியப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் 2வது தளத்தில் 1084 சதுர அடி கட்டுமானப் பரப்பளவு கொண்ட பொதுப் பகுதி உட்பட ஃப்ளாட் எண். 202 மற்றும் ஒரு கார் பார்க்கிங்

துலிப் அப்பார்ட்மெண்ட்-ன் அட்டவணை: திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, கொரட்டூர் கிராமத்தில் கதவு எண்.14 மற்றும் 14/22 பகுதி பிரமின் தெரு, கொரட்டூர், சென்னை -600080 என்ற முகவரியில் கிராம நத்தம் சர்வே எண். 916/2A1, 916/2A1 பகுதி, டவுன் சர்வே எண்.30, பிளாக் எண்.30, வார்டு E-ன் படி 3387 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: திரு.வட்கமணன் & திருமதி.விட்டோ பாய் ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து, தெற்கில்:M/s.சன்மா டெநிநீல் விஷன் பிரைவேட் லிமிடெட் -க்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: பிராமின் தெரு, மேற்கில் : திருமதி.விட்டோ பாய் & திரு.வட்கமணன் ஆகியோர்களுக்கு சொந்தமான மீதமுள்ள சொத்து.

குறைந்த பட்ச விலை : ரூ.53,00,000/- | முன் வைப்பு தொகை: ரூ.5,30,000/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/-

வ.எண். 2 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :

கடன்தாரர்: திருமதி S. உமா க/பெ. திரு. சீனிவாசன், B2 ரவுண்ட் பில்டிங், VTC அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், அண்ணாநகர், சென்னை - 600101 மற்றும் **மேலும்:** ஃப்ளாட் எண்.101, முதல் தளம், கதவு எண். 14 & 14/22, பிரமின் தெரு, வார்டு-E, பிளாக் எண்.63 & 68, கொரட்டூர் கிராமம், பெருநகர் சென்னை மாநகராட்சி எல்லை, அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்- 600080.

மொத்த நிலுவை தொகை: 05-07-2026 அன்று வரை ரூ.75,44,813.07/- (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று பதிமூன்று மற்றும் பைசா ஏழு மட்டும்) மேலும் **05-07-2026** முதல் பின்வட்டி மற்றும் பிற சட்ட செலவுகள் உட்பட.

தெரிந்தவரை ஏதேனும் வில்லங்கங்களுடன் கூடிய விரிவான குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துகள் : சுவாதீன நிலை : அசல் சுவாதீனம் : சொத்தின் அட்டவணை: திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, கொரட்டூர் கிராமத்தில் சம பங்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள 505 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலத்துடன் "துலிப்" என அறியப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் முதல் தளத்தில் 1129 சதுர அடி கட்டுமானப் பரப்பளவு கொண்ட பொதுப் பகுதி உட்பட ஃப்ளாட் எண். 101 மற்றும் ஒரு கார் பார்க்கிங்.

துலிப் அப்பார்ட்மெண்ட்-ன் அட்டவணை: திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, கொரட்டூர் கிராமத்தில் கதவு எண்.14 மற்றும் 14/22 பகுதி பிரமின் தெரு, கொரட்டூர், சென்னை -600080 என்ற முகவரியில் கிராம நத்தம் சர்வே எண். 916/2A1, 916/2A1 பகுதி, டவுன் சர்வே எண்.30, பிளாக் எண்.30, வார்டு E-ன் படி 3387 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: திரு.வட்கமணன் & திருமதி.விட்டோ பாய் ஆகியோர்களுக்கு சொந்தமான சொத்து, தெற்கில்: ஸ்ரீ நிர்மாண் இன்மாம் இன்ஃப்ரா பிரைவேட் லிமிடெட் -க்கு சொந்தமான சொத்து, கிழக்கில்: பிராமின் தெரு, மேற்கில் : திருமதி.விட்டோ பாய் மற்றும் திரு.வட்கமணன் ஆகியோர்களுக்கு சொந்தமான மீதமுள்ள சொத்து.

குறைந்த பட்ச விலை : ரூ. 58,20,000/- | முன் வைப்பு தொகை: ரூ.5,82,000/- | ஏல உயர்வு தொகை: ரூ. 25,000/-

வ.எண். 3 : கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி :